

சென்னை கிழக்கு மாவட்ட, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை இணை அமைப்பாளர் சேப்பாக்கம் கே. ராஜு மறைவையொட்டி முன்னாள் அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. அன்னாரின் உடலுக்கு மாலை அணிவித்து இறுதி மரியாதை செலுத்தினார். உடன் வட்டக் கழக செயலாளர் சேப்பாக்கம் வே.பா. பிரபாகரன், 114 அ வட்டக்கழக செயலாளர் ஏ.தமீம் அன்சாரி, பகுதி பிரதிநிதி ஆர்.அன்பழகன், இளநீர் டி.என்.காளி, சி.யுவராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் இருந்தனர்.



தொ.மு.ச சென்னை மாவட்ட கவுன்சில் சார்பில் முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களின் தந்தை முன்னாள் மாவட்ட செயலாளர் எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் 37ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு ஆர்.கே.நகர் பகுதியில் உள்ள விழி இழந்தோர் இல்லத்தில் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்வு நெல்லை எம்.எம்.சாமி ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தா.இளையஅருணா, இரா.லட்சுமணன், என்.மருதுகணேஷ், மு.கோபி, கி.ராஜேந்திரன், நா.சண்முகம், நேதாஜி யு.கணேசன், கட்டீஸ் ப.சோமசுந்தரமூர்த்தி, வெ.சு.சத்தியநாராயணன், மாவட்ட கவுன்சில் செயலாளர் சுந்தரமூர்த்தி, எஸ்.பி.எஸ்.புத்தன், ப.குமார், ச.தமிழ்செல்வன், நா.கோதண்டன், எஸ்.ராஜசேகர், டி.ரவிசந்திரன், என்.அசோகன், ஜெ.சுரேஷ்பாபு , சைதை ஜெயபால், இ.கருணாகரன், ஜி.செல்வராஜ், செல்வம், டில்லிராஜன், வி.கே.ராஜ், எஸ்.மதியழகன், கா.ரீதர், ஜி.செல்வநாயகம், க.அண்ணாமலை, கே.லீலாமாதவன், வாசுதேவன், எஸ்.கோபால், மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சென்னை கிழக்கு மாவட்ட

மாணவர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கினார்!

சென்னை, நவ.13- சென்னை கிழக்கு மாவட்ட மாணவர் அணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், 12.11.2026 வியாழக்கிழமை மாலை 5.00 மணியளவில், சென்னை ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலையில் உள்ள எம்.கே.டி. மஹாலில் நடைபெற்றது. மாணவர் அணி அமைப்பாளர் நா. ரஞ்சித் விஜயாலயன் தலைமையிலும், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ம. அசோக் குமார் முன்னிலையிலும் நடைபெற்ற இக்கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. அவர்கள் கலந்துகொண்டு ஆலோசனைகள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாணவர் அணி மாவட்டத் துணை அமைப்பாளர்கள் எஸ். மதனரூபன், ஜோஸ்வா லிவிங்ஸ்டன், எஸ்.எஸ். மணிகண்டன், அசோக் ஆண்ட்ரூஸ், ம. ஜெயலட்சுமி ஆகியோரும், விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்டத் துணை அமைப்பாளர்கள் ஏ. பாபுராஜ், கே. ஜெயக்குமார், ஆர். சீனிவாசன், என். மோகன் குமார், எ. விஜய் குமார், எம். கமலநாதன், பி.ஆர். யஷ்வந்த் குமார், சீனிவாசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



மாணவர் அணிப் பகுதி அமைப்பாளர்கள் எம்.அழகேஷ், எம். சிலம்பரசன், J.M. நிறைமொழி, ஆர்.ஆகாஷ், டி. தினேஷ் ஆகியோரும், விளையாட்டு மேம்பாட்டு அணிப் பகுதி அமைப்பாளர்கள் ஜி. பாலகுமார், மோகனசுந்தர், பென்னி, விக்னேஸ்வரன், மனோஜ் குமார், தர்மராஜ், இன்ப நாதன், கோபி ராமச்சந்திரன், கோபி வசந்தம், கார்த்திகேயன், செந்தில் குமார், சிவ வேல் ஆகியோரும், இரு அணிகளின் பகுதித் துணை அமைப்பாளர்கள், செயல்வீரர்கள் மற்றும் முன்னோடிகளும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு.

தமிழ்நாட்டில் நிலவும் விலைவாசி உயர்வு, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்முறைகள், சட்டம்-ஒழுங்குச் சீர்கேடுகள் உள்ளிட்ட மக்கள் விரோதச் செயல்பாடுகளைக் கண்டித்தும், பொதுமக்களின் உரிமைகளைப் பாதுகாக்க வலியுறுத்தியும், தமிழக வெற்றிக் கழகத்தைக் கண்டித்தும், தமிழ்நாடு முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தி, மக்களிடையே மிகப்பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தி வரும் கழகத் தலைவர் அவர்களுக்கும், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் கழக இளைஞரணிச் செயலாளருமான திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் இக்கூட்டம் தனது மனமார்ந்த பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது.

கழகத் தலைமையின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாட்டில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்முறைகள், போதைப்பொருள் புழக்கம், விலைவாசி உயர்வு மற்றும் சட்டம்-ஒழுங்குச் சீர்கேடுகளைக் கண்டித்து, 31.10.2026 சனிக்கிழமை காலை 9.30 மணியளவில், சென்னை கிழக்கு, வடக்கு மற்றும் வடகிழக்கு மாவட்டங்களின் சார்பில் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் எழுச்சியுடன் பங்கேற்ற சென்னை கிழக்கு மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகளுக்கும், சென்னை வடக்கு மற்றும் வடகிழக்கு மாவட்டங்களிலிருந்து வருகை தந்து ஆர்ப்பாட்டத்தைச் சிறப்பித்த மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகளுக்கும், கழகத் தோழர்கள் அனைவருக்கும் இக்கூட்டம் தனது நெஞ்சார்ந்த நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது.

தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் கழக இளைஞரணிச் செயலாளருமான திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 50-வது பிறந்தநாளை, வரும் 27.11.2026 வெள்ளிக்கிழமையன்று, சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாணவர் அணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் எழுச்சியுடனும் சிறப்புடனும் கொண்டாடுவதென இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

தந்தை பெரியாரின் சமூகநீதிக் கொள்கைகள், பேரறிஞர் அண்ணாவின் இலட்சியங்கள், முத்தமிழறிஞர் கலைஞரின் மக்கள் நலச் சிந்தனைகள் மற்றும் கழகத் தலைவரின் வழிகாட்டு தல்களை மாணவர்களிடமும் இளைஞர்களிடமும் கொண்டுசேர்க்கும் வகையில், சென்னை கிழக்கு மாவட்ட மாணவர் அணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணி நிர்வாகிகள் ஒருங்கிணைந்து செயல்படுவதெனவும், கல்வி, விளையாட்டு, சமூகநீதி, பெண்கள் பாதுகாப்பு மற்றும் இளைஞர் முன்னேற்றம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்துவதெனவும் இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

இரங்கல் தீர்மானம்

சென்னை கிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் நா. ரஞ்சித் விஜயாலயன் அவர்களின் தந்தை பீ. நாராயணசாமி (வயது 62) அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி, அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும் உற்றார் உறவினர்களுக்கும் இக்கூட்டம் தனது ஆறுதலையும் ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(12.11.2026)



1. சென்னை பெரம்பூர் சக்கரபாணி தோட்டத்தில் மகளுடன் உள்ள கள்ளக்காதலை கைவிட மறுத்ததால் த.வெ.க. நிர்வாகி சரமாரியாக கத்தியால் குத்திக் கொலை ...

2. சென்னை காசிமேடு சிங்காரவேலர் நகர் பகுதியில் மது போதையில் நண்பர்களுக்குள் ஏற்பட்ட தகராறில் ரவுடி சரமாரியாக வெட்டிக் கொலை ...

3. ராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி அருகே முன்விரோதம் காரணமாக கட்டிட மேஸ்திரி கத்தியால் சரமாரியாக குத்திப் படுகொலை. சடலத்துடன் மருத்துவமனைக்குச் சென்ற வாலிபர்களால் பரபரப்பு ...



4. சென்னை அபிராமபுரம், கே.வி.பி. கார்டன் பகுதியில் போதைப் பொருள் விற்பது தொடர்பான தகராறில் ஆட்டோ டிரைவர் சமாரியாக வெட்டிக் கொலை ...

5. சென்னை பெரம்பூர் சக்கரபாணி தோட்டத்தில் முன் விரோதம் காரணமாக ஆட்டோ டிரைவரை கத்தியால் குத்திக் கொலை செய்த பெயிண்டர் ....

6. கள்ளக்குறிச்சி டி.எஸ்.பி. அலுவலகத்தில் புகார் அளிக்கச் சென்ற பெண்ணிடம் டி.எஸ்.பி. பாலியல் ரீதியாக அத்துமீறியதாக பெண் புகார் ....



7. திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அருகே அரசு நிதி உதவி பெறும் பள்ளியில் இரண்டாம் வகுப்பு பயிலும் மாணவியிடம் பாலியல் தொல்லையில் ஈடுபட்ட ஆசிரியர் சிக்கினான் ...

8. காஞ்சிபுரம் மாவட்டம் ஓரகடம் மேம்பாலம் அருகே டாஸ்மாக் கடைகளில் வசூலான ஒன்னறை கோடி பணம் கொள்ளை. படபாணியில் நூதன சம்பவம் ....

9. சென்னை துரைப்பாக்கம் அருகே வேம்புலி அம்மன் கோவில் தெருவில் உள்ள துர்க்கை செங்கழனியம்மன் திருக்கோவிலில் உண்டியல் பணம் மற்றும் அம்மன் கழுத்தில் இருந்த தங்கத்தாலி உள்ளிட்டவை கொள்ளை ...




10. திண்டிவனம் அருகே பிரபலமான அம்மன் கோவில் உண்டியலை உடைத்து பணம் கொள்ளை...

11. சென்னை சூளை வி.வி. கோவில் தெருவில் தங்க நகை தயாரிக்கும் நிறுவனத்தில் 44 சவரன் தங்கம் திருட்டு. ஊழியர் கைவரிசை...

12. நீலகிரி மாவட்டம் ஊட்டி அருகே தண்ணீர் பிடிப்பது தொடர்பான தகராறில் தாய் மற்றும் மகனை சாதிப் பெயரைச் சொல்லித் தாக்கிய இந்து முன்னணி நிர்வாகி ...

13. ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் அருகே நீலகண்டராயன் வனப் பகுதியில் வெளி மாநிலத்திற்கு கடத்த இருந்த செம்மரக்கட்டைகள் சிக்கின....

14. திண்டுக்கல் மாவட்டம் செந்துறை அருகே மாமரத்துப்பட்டியில் கையில் வீச்சரிவாளுடன் நாங்க தான் கெத்து என்று வீர வசனம் பேசி ரீல்ஸ் வைரல்....



15. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் தொடரும் போதைப் பொருள் விற்பனை. தாம்பரம், சேலையூர், வேளச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் கஞ்சா சிக்கியது ....

16. புது வண்ணாரப்பேட்டையில் மளிகைக் கடையை அடித்து உடைத்ததாக திருநங்கைகள் மீது முதியவர் புகார் - போலீசார் விசாரணை!

த.வெ.க. ஆட்சியில் குடிநீர் தொட்டியில் மலம் கலந்த விவகாரம்

கூட்டணிக் கட்சிகள் கள்ள மௌனம் சாதிப்பது ஏன்?

தி.மு.கழக ஐ.டி.விங் கேள்வி!

சென்னை, நவ. 13- த.வெ.க. ஆட்சியில் 6 மாதங்களில் 3 முறை குடிநீர் தொட்டியில் மலம் கலந்த போதும் கூட்டணி கட்சிகளும் நடுநிலையோக்கியர்களும் கள்ள மௌனம் சாதிப்பது ஏன் என்று தி.மு.கழக ஐ.டி.விங் கேள்வி எழுப்பியுள்ளது.

தி.மு.க ஐ.டி.விங் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

6 மாத தவெக ஆட்சியில 3வது முறை குடிநீர் தொட்டியில மனிதக்கழிவு! வாய் மூடி மௌனமாக வேடிக்கை பார்க்கும் கூட்டணிக் கட்சிகளும் 'நடுநிலை' யோக்கியர்களும்!

இதுவே வேறு ஆட்சியாக இருந்திருந்தால், இந்நேரம் சமூக நீதி, மனித உரிமை எனப் பேசும் நாடகம் போடும் கட்சிகளும் ஆளுங்களும் இந்நேரம் பொங்கியிருப்பார்கள்!



ஆனால் இப்போது தவெக கூட்டணியில் ஒட்டிக் கொண்டு இருக்கும் ஒரே காரணத்துக்காக, மக்கள் குடிக்கும் தண்ணீரில் மனிதக்கழிவு கலக்கும் அநியாயத்தைக் கூடத் தட்டிக் கேட்க வக்கில்லாமல் வாய் மூடிக் கிடக்கிறீர்களே, இதுதான் உங்கள் கொள்கையா?

நாங்கள் நடுநிலைவாதிகள், தப்பு நடந்தால் யாராக இருந்தாலும் கேள்வி கேட்போம் என்று சீன் போட்டவர்கள் எல்லாம் இப்போது எந்தப் பொந்துக்குள் போய் ஒளிந்துகொண்டீர்கள்? திமுக ஆட்சியில் சின்ன விஷயம் நடந்தாலும் "தமிழ்நாடே அழிந்து போச்சு" என ஒப்பாரி வைத்த மீடியாவும், நடுநிலை கும்பலும், தவெக ஆட்சியில் 6 மாதத்தில் 3 தடவை குடிநீர் தொட்டியில் மலம் கலந்தபோது கூட கள்ள மௌனம் சாதிப்பது ஏன்?

இவ்வாறு தி.மு.கழக ஐ.டி.விங் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



காஞ்சிபுரம் மாநகராட்சி, 18வது வார்டில் மாநில வர்த்தக அணி துணைச்செயலாளர் வி.எஸ்.ராமகிருஷ்ணன் தலைமையில் தூய்மைப் பணியாளர்களுக்கு நல உதவிகள் மற்றும் ஊக்கத் தொகை18 ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. மல்லிகா ராமகிருஷ்ணன் ஏற்பாட்டில் வழங்கப்பட்டது. இந் நிகழ்வின் போதுகழக முன்னணியினர், கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியம் வெள்ளவேடு ஊராட்சி பருவதராஜபுரம் கிளைக் கழக செயலாளர் முனுசாமி மனைவி மறைந்த சூரியகலா திருவுருவ படம் திறப்பு நிகழ்வு ஒன்றியச் செயலாளர் டி.தேசிங்கு முன்னிலையில் நடைபெற்றது. இதில் பூவிருந்தவல்லி முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் மாநில ஆதிதிராவிட நலகுழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி திருவுருவப்படத்தை திறந்து வைத்து மரியாதை செலுத்தினார். உடன் முன்னாள் ஊராட்சி செயலாளர் பி.சி.முனுசாமி, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ஜி.பிரவீன்குமார், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வெள்ளவேடு பி.சி.எம். உதயாகுமார், நிர்வாகிகள் ஜி.பி.பரணிதரன், சிபிசக்கரவர்த்தி, மு.தே.ராஜேஷ், மோகன், கண்ணதாசன், புகழேந்தி, சரத், உள்பட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.